Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 31.07.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 31.07.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவையில், பிறப்பு-இறப்பு பதிவுகள் குறித்த திருத்த மசோதா, அமளிக்கு இடையிலேயே நிறைவேற்றப் பட்டது.

எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டை ஊக்குவிப்பதால் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் சமரசம் எதுவும் இராது என்று, மத்திய அரசு கூறியுள்ளது.

நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் ஆர். பாலசுப்ரமணியம், இன்று புதுச்சேரியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதனை, மரியாதை நிமித்தம் சத்தித்துப் பேசினார்.

*நடாளுமன்றம் -1(19)*

டெல்லி மாணவர் போராட்டத்தின் போது போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் இதர பிரச்சனைகள் குறித்து, இன்று நாடாளுமன்றத்தில், எதிர்க்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், இரு

அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவை, முதலாவது ஒத்தி வைப்பிற்குப் பின்னர், நண்பகல் 12 மணிக்கு மீண்டும் கூடிய போது, பிறப்பு-இறப்பு பதிவுகள் குறித்த திருத்த மசோதா, அவையில் கொண்டுவரப்பட்டு, அமளிக்கு இடையிலேயே விவாதமின்றி நிறைவேற்றப் பட்டது. முக்கியமான இம்மசோதா மீது அனைத்துக் கட்சிகளும் பங்கேற்றுப் பேச வேண்டும் என்றே அரசின் விரும்பியதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜ்ஜூ அவையில் கூறினார். மசோதா நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, மக்களவையின் அலுவல்கள் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவையில் இன்று காலை 11 மணிக்கு அலுவல்கள் தொடங்கிய போது, பல்வேறு அமைச்சர்கள், தத்தம் துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக் குழு அறிக்கைகளையும், ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட இத்தகைய அறிக்கைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும், அவையில் தாக்கல் செய்தனர். இதை தொடர்ந்து பூஜ்ய நேரம் தொடங்கிய போது, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், மாநிலங்களவையின் இன்றைய அலுவல்களும் ஒத்தி வைக்கப்பட்டன.

*நடாளுமன்றம் -2 (03)*

இனி, இரு அவைகளும், ஆகஸ்ட் 3ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கூடும். மக்களவையில் இன்று நிறைவேற்றப்பட்ட, பிறப்பு-

இறப்பு பதிவுகள் சட்ட திருத்த மசோதா குறித்து கூடுதல் விவரங்கள் ...

(வாய்ஸ்)

*நடாளுமன்றம் -3 வாய்ஸ் (13)*

(வாய்ஸ்)

புதிய மசோதாவில் பிறப்பு மற்றும் இறப்பை தாமதமாக பதிவு செய்வதற்கான விதிமுறைகள் கடுமையாக்கப் பட்டுள்ளன. பிறப்பு-இறப்பை தாமதமின்றி உரிய காலத்தில் பதிவு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், இவ்விதிமுறைகள் அமைந்துள்ளன. பிறப்பு அல்லது இறப்பு நிகழ்ந்து, ஓராண்டு முதல் இரண்டு ஆண்டு காலத்திற்குள் பதிவு செய்வதாக இருந்தால் மாவட்ட குற்றவியல் நீதிபதி அல்லது துணைக் கோட்ட குற்றவியல் நீதிபதியின் ஒப்புதல் தேவை என புதிய விதிமுறை மசோதாவில் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பதிவு செய்வதாக இருந்தால், முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதியின் உத்தரவைப் பெறுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தாமதமான பிறப்பு-இறப்பு பதிவுகளை அனுமதிக்கும் முன்பாக அதன் உண்மைத் தன்மையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சரிபார்த்தல் அவசியம் என்றும் மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மோடி -வாழ்த்து (07)*

காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் 110 கிலோ பளு தூக்கும் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர் லவ்ப்ரீத் சிங், மகளிர் வட்டு எறிதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள இந்திய வீராங்கனை சீமா காளிரம்னா ஆகியோருக்கு, பிரதமர் திரு.நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இவர்களின் இந்த வெற்றியினால், நாட்டிற்கே பெருமை என்றும், இதனால் இந்திய இளைஞர்கள் தொடர்ந்து ஊக்கம் பெறுவார்கள் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

*கட்டிடம் - இரங்கல் (12)*

மஹாராஷ்டிர மாநிலம் தானேயில், கட்டிடம் இடிந்து விழுந்த தால் ஏற்பட்ட விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணம்பெறத் தாம் வேண்டுவதாகவும், குடியரசு துணைத் தலைவர், சமூக ஊடகப் பதிவில் கூறியுள்ளார். இவற்றில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கும், தலா 50 ஆயிரம் ரூபாய் உதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

*மருந்து கோயல் (12)*

புதுடெல்லியில் நேற்று தொடங்கிய, மருந்து கட்டுப்பாடு குறித்த 2 நாள் உலக மாநாடு இன்றுடன் முடிவடைகிறது. மருந்து உற்பத்தி துறையில், உலகின் முக்கிய புதுமையாக்க கேந்திரமாக இந்தியாவின் நிலையை இன்னும் வலுப்படுத்த இம்மாநாடு உதவிகரமாக இருக்கும் என்று மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் சமூக ஊடகத்தில் கூறியுள்ளர். உலகம் முழுவதிலும், தரமான மருந்துகள் குறைந்த விலையில் மக்களுக்கு கிடைக்கும்படி செய்வதே இந்தியாவின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கு ஏதுவாக, உலக நாடுகளுடன் மருந்து வர்த்தக உடன்பாடுகளை விரிவுபடுத்திக் கொள்ளவும், பல்வேறு நாடுகளின் மருந்து கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளவும் இந்தியா விரும்புவதாக அவர் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*எத்தனால் பெட்ரோல் -1 (06)*

எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டை ஊக்குவிப்பதால் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் சமரசம் எதுவும் இராது என்று, மத்திய அரசு கூறியுள்ளது. இறக்குமதி எண்ணெய் மீது சார்ந்துள்ள நிலையை

மாற்றி, நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும், மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்... (வாய்ஸ்)

*எத்தனால் பெட்ரோல் -2 (19)*

(வாய்ஸ்)

குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில் கொள்முதல் செய்யப்படும் உணவு தானியங்கள், முதலில், பொது விநியோகத் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்கள், மற்றும், கட்டாயக் கையிருப்புத் தேவைகளுக்கு மட்டுமே ஒதுக்கப் படுவதாகவும், அதற்கு மேல், உபரிக் கையிருப்பாக சான்றளிக்கப்படும் உணவு தானியங்கள் மட்டுமே, எத்தனால் உற்பத்திக்கு மாற்றப்படுவதாகவும், பெட்ரோலியத்துறை அமைச்சகம் தெளிவு படுத்தியுள்ளது. எத்தனால் உற்பத்திக்கு அனுப்பப்படும் தானியங்களில், நொறுங்கல் அரிசி உட்பட, மனித நுகர்வுக்கு ஒவ்வாத தானியங்கள் அடங்கும் என்றும், இதன் மூலம் கழிவு தானியங்களை பயனுள்ள எரிபொருளாக மாற்ற முடிவதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது. அதே சமயம், எத்தனால் உற்பத்தியில் உணவு தானியங்களின் பயன்பாட்டைத் தவிர்க்கும் வகையில், கரும்புச் சக்கை உள்ளிட்ட வேளாண் கழிவுகளில் இருந்து எத்தனால் தயாரிக்கப்படுவதை, அரசு ஊக்குவித்து வருவதையும்,

அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது. பெட்ரோலை விடக் குறைந்த விலையில் எத்தனால் கிடைக்கச் செய்வது, இத்திட்டத்தின் நோக்கம் அல்ல என்றும், சர்வதேச அளவிலான கச்சாஎண்ணெய் விலை ஏற்றத் தாழ்வுகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதே அரசின் குறிக்கோள் என்றும், அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி சந்திப்பு (06)*

அரசு முறை பயணமாக புதுச்சேரி வந்துள்ள நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் ஆர். பாலசுப்ரமணியம், இன்று துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதனை, மரியாதை நிமித்தம் சத்தித்துப் பேசினார். மக்கள் இல்லத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது தலைமைச் செயலர் டாக்டர் சரத் சௌஹான், துணை நிலை ஆளுநரின் செயலர் டாக்டர் மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

*ரங்கசாமி (08)*

புதுச்சேரியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் அமலாகி வரும் பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ், மங்கலம் தொகுதியைச் சேர்ந்த 25 பயனாளிகளுக்கு, தலா 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 68 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் முதல் தவணை உதவிகளை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஆதி

திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு. அர்ஜுன் ராமகிருஷ்ணன், அதிகாரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

*ஏனாம் (07)*

ஏனாமில், அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணா ராவ் இன்று, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் மற்றும் இதர அதிகாரிகளுடன் இணைந்து, குப்பைக் கிடங்கு மற்றும் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டு தூய்மை நிலவரங்களை ஆய்வு செய்தார். ஏனாம் வெங்கடேஸ்வரர் கோவில் கட்டுமானப் பணிகளிலும், ஏழைகளுக்கு மனைப் பட்டுவாடா வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலங்களையும் அவர் பார்வையிட்டார். ஏனாம் அரசு பொது மருத்துவமனையிலும், அவர் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

*காரைக்கால் மாணவர் சேர்க்கை (09)*

காரைக்கால் திருப்பட்டினத்தில் உள்ள அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில், நடப்பு கல்வியாண்டிற்கான ஓராண்டு தொழிற்பயிற்சி பிரிவுகளில் காலியாகவுள்ள இடங்களுக்கு, உடனடி மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. 8 அல்லது 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவிகள், தொழிற்பயிற்சி நிலையத்தை நேரில் அணுகி, கணிப்பொறி இயக்கம், தரவு உள்ளீடு, அழகுக் கலை, மற்றும், தையல் பயிற்சி வகுப்புகளில் சேரலாம் என்றும், முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை

என்ற அடிப்படையில் சேர்க்கை வழங்கப் படுவதாகவும், தொழிற்பயிற்சி நிலையம் தெரிவித்துள்ளது.

*ரவி மாரியப்பன் (06)*

புதுச்சேரியில் தூர்தர்ஷன் பொறியியல் பிரிவு துணை இயக்குநரும், தூர்தர்ஷன் தொலைக்காட்சி மற்றும் ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தின் உள்ளூர் நிர்வாகத் தலைவருமான திரு. ரவி மாரியப்பன், இன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் தமது 38 ஆண்டுப் பணிக் காலத்தில், அந்தமான் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் பணி புரிந்துள்ளார்.

*வானிலை (13)*

கீழ்மட்ட வளிமண்டலம் மற்றும் சராசரி கடல் மட்டத்தில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பாதைகள் காரணமாக இன்று கோவை-நெல்லை மாவட்ட மலைப்பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி, குமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய, கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை

எதிர்பார்க்கப்படுகிறது. வரும் ஆகஸ்ட் 6ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*மாலத்தீவு (07)*

மாலத்தீவுகளின் ஃபேவரா-உடனடி பணப் பட்டுவாடா கட்டமைப்பு, இந்தியாவின், UPI-டிஜிட்டல் பணப் பட்டுவாடா வசதியுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, இருநாடுகளுக்கும் இடையே நிகழ்நேரப் பணப் பரிமாற்றம் நேற்று முதல் தொடங்கியுள்ளது. ரிசர்வ் வங்கிக்கும், மாலத்தீவு பணப் பட்டுவாடா ஆணையத்திற்கும் மற்றும் சம்பந்தப்பட்ட இதர அமைப்புகளுக்கும் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பு மூலம், இது சாத்தியமாகி இருப்பதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவையில், பிறப்பு-இறப்பு பதிவுகள் குறித்த திருத்த மசோதா, அமளிக்கு இடையிலேயே நிறைவேற்றப் பட்டது.

எத்தனால் கலந்த பெட்ரோல் பயன்பாட்டை ஊக்குவிப்பதால் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் சமரசம் எதுவும் இராது என்று, மத்திய அரசு கூறியுள்ளது.

நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் ஆர். பாலசுப்ரமணியம், இன்று புதுச்சேரியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதனை, மரியாதை நிமித்தம் சத்தித்துப் பேசினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது RSS/CN/VM.
Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 31.07.2026 / Script